‘மாநாடு பேரில் பாராட்டுக் கூட்டம்!’

REGD. No M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The “Nam Nadu”: A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆனி 11வ வெள்ளி (25—6—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆனி 12வ சனி (26—6—54) | இதழ்: 10

‘எமது உரிமைக் குரலை ஒடுக்க எந்த சக்திக்கும் ஆற்றல் இல்லை!’

‘ஆதிக்கம் அழியும் வரை எழுச்சி இருந்தே தீரும்!’

‘நியாயமான எழுச்சி எதிர்ப்புகளால் அடங்கிவிடாது!’

சத்தியவாணிமுத்து, நெடுஞ்செழியன் முழக்கம்

(நமது தனி நிருபர்)

சென்னை, ஜூன் 25—

சென்னை கோகலே மண்டபத்தில் நேற்று மாலை 7 மணிக்கு தோழமைக் கழகத்தின் சார்பில் ஒரு சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது.

தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் ‘எழுச்சியும்—எதிர்ப்பும்’ என்ற தலைப்பில் சிறந்ததோர் எழுச்சி உரை ஆற்றினார்.

நுழைவுக் கட்டணமாக அணா கொடுத்து ஆயிரத்திற்கு அதிகமான தோழர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையுரை ஆற்றுகையில் கூறியதாவது:—

“எழுச்சியும் எதிர்ப்பும் இந்த நாட்டில் மட்டுமல்ல—எல்லா நாடுகளிலும் பல துறைகளிலும் எழுச்சியும், அந்த எழுச்சிக்கு எதிர்ப்பும் தோன்றியுள்ளன. எழுச்சிக்குக் காரணமாக அரசியல் நிலைகள் மட்டுமிருக்கவில்லை சமுதாயத்தில் விடுதலை பெறவும், பொருளாதாரத் துறையில் சமத்துவம் பெறவும், அரசியலில் சுதந்திரத்தோடு வாழவும் உலகின் பல பகுதிகளிலே எழுச்சி தோன்றியுள்ளதையும், அந்த எழுச்சிக்கு அவ்வப்போது எதிர்ப்புக் காட்டப்பட்டிருப்பதையும் நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம். எழுச்சிகளை அடக்க உபயோகிக்கப்பட்ட கடும் அடக்குமுறைகள் எல்லாம், எழுச்சியை உண்டுபண்ணும் சிந்தனையாளர்களால் உடைத்தெறியப்பட்டு எழுச்சி வெற்றிபெற்றிருப்பதையும் நாம் அறிகிறோம்.

“நமது நாட்டில் — குறிப்பாக பெண்கள் சமுதாயத்தின் விடுதலையை முன்வைத்து, அவர்களும் ஆண்களோடு சரிநிகர் சமானமாக உரிமையுடன் வாழவேண்டுமென்ற அடிப்படையில் நாம்தான்—தி. மு. க. தான்—அதிக அக்கறை காட்டி பணியாற்றி வருகிறது. வேறு பல அரசியல் கட்சிகள் போலின்றி, நாம்தான், நாட்டிலே, சமுதாய பொருளாதார — அரசியல் ஆகிய முப்பெருந்துறைகளிலும் எழுச்சியை உண்டுபண்ணி வருகிறோம்.”

அடுத்துத் தோழர் இரா. நெடுஞ்செழியன் ‘எழுச்சியும் எதிர்ப்பும்’ என்ற தலைப்பில் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவின் சாராம்சமாவது:—

“மனிதன் பிறந்த நாள் முதல் எழுச்சி பெற்று வாழத் துடித்திருக்கிறான்; வாழ்வின் முன்னேற்றத்திற்காக அவன் ஒவ்வொருமுறை எழுச்சியுற்ற போதெல்லாம் தொடர்ந்து அந்த எழுச்சிக்கு எதிர்ப்பும் இருந்தே வந்திருக்கிறது; ஆனால் எந்த ஒரு நியாயமான அடிப்படையில் எழுப்பிய எழுச்சியும் எந்தவித எதிர்ப்புகளாலும் அழிக்கப்பட்டது கிடையாது.

“மனிதன் காட்டுமிராண்டி நிலையில் இருந்த காலத்தில் இயற்கையின் எதிர்ப்புகளுக்கு அஞ்சி நடந்தான்; ஆனால் காலப்போக்கிலே தனது அறிவுத் திறத்தால் — அறிவு எழுச்சியால் இயற்கையின் எதிர்ப்புகளைக் கட்டுப்படுத்தி, அதை, தனக்கு சாதகமாக்கிக் கொண்டான்.

“மனிதன்—மிருக இனத்திலிருந்து பிரித்துப் பார்க்கப்படுவது அவனிடமுள்ள பகுத்தறிவினால் மட்டுமல்ல; நல்லதையும் கெட்டதையும், பகுத்தறிந்து சொல்கிற அறிவை நாய் கூடத்தான் பழக்கத்தால் பெற்றுவிடுகிறது. நாம் வளர்க்கும் நாய்—நம்மையும், நமக்கு வேண்டியவர்களையும் கண்டால் வாலைக் குழைத்துக் கொண்டு வாலாட்டுகிறது; மாற்றாரைக் கண்டால் — வேற்று மனிதரைக் கண்டால் ‘வள், வள்’ எனக் குரைத்துக் கடிக்க ஓடுகிறதே ஏன்? அதற்கு, ‘யார் வேண்டியவர்கள், யார் வேண்டாதவர்கள்,’ என்று பகுத்தறியும் உணர்வு ஓரளவேனும் பழக்கத்தால் வந்து ஏற்பட்டுவிடுகிறதே?

“இதனால் மனிதன்—விலங்கினத்திலிருந்து பிரிந்து, உயர்ந்தவன் எனச் சொல்லப்படுவே

(4-ம் பக்கம் பார்க்க)

முதுமை ஏற்பட்டாலும், முடிவேற்படாத பதவி மோகம்!

வெளிநாட்டு தூதுவர் பதவி பண்டிதரின் குடும்பச் சொத்தாகிறது!

விஜயலட்சுமியார் இங்கிலாந்தில் இந்தியத் தூதுவராவாராம்!

திருமதி விஜயலட்சுமி பண்டிட் இந்தியாவின் தூதுவராக, இங்கிலாந்தில் நியமிக்கப்பட்டுள்ளார். அதிகாரபூர்வமான அறிக்கை வெளியிடப்பட வேண்டியது தான் இப்பொழுது வேண்டியுள்ளது.

திருமதி பண்டிட்டின் ஐ. நா. பொதுச் சபையின் தலைவர் பதவிக் காலம் செப்டம்பர் 21-ந் தேதியுடன் முடிவடைகிறது; என்றாலும், அவர், உடனடியாக லண்டனில் தனது புதிய பதவியை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்றும் தெரிகிறது.

நியூயார்க்கில் தனது தலைமைப் பதவியினின்றும் விலகியதும் அம்மையார் தனது சுய சரிதையை வெளியிடவிருக்கிறாராம். அதன் பின் நேராக ஜப்பான் சென்றுவிட்டு, பின்னர் டில்லி வழியாக லண்டன் சென்று தனது புதுப் பதவியை மேற்கொள்வார் எனத் தெரிய வருகிறது.

அதுவரை, தற்காலிகமாகத் தூதுவர் பதவி வகித்துவரும் எம். ஜே. தேசாய், அம்மையார் வரும்வரை தொடர்ந்து தற்காலிகமாகவே தூதுவராக இருப்பாராம்!

‘எஸ். எஸ். ஆர். போக்கைக் கண்டித்ததற்காகவே நாம் புறக்கணிக்கப்பட்டோம்’

‘பாராட்டும், வசையும் தவிர வன்னியப் பெருமக்களுக்கு வழிகாட்டவில்லை!’

‘உழைப்பாளர் கட்சியின் எதிர்காலம்பற்றி முடிவில்லை’

குலப் பிரமுகர்களுக்கு கோபால கவுண்டர் எம். எல். ஏ. வேண்டுகோள்

★

“தென்னாற்காடு மாவட்ட வன்னியகுல க்ஷத்திரிய மாநாட்டின் 10-ம் ஆண்டு விழா நடத்த, 1954 பிப்ரவரி மாதத்தில் ஆலோசனைக் கூட்டம் கூடி, மார்ச்சு மாத முடிவிற்குள் மாநாட்டை நடத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தக் காலத்தில் கனம். எஸ். எஸ். இராமசாமி படையாச்சியார், மந்திரி ஆவார் என்பதற்கு ஒரு அறிகுறியும் கிடையாது. ஆகவே, என்னை வரவேற்புக் கமிட்டி தலைவராகவும், சட்ட சபை எதிர்க் கட்சித் தோழர்களை பேச்சாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டது;

“ஆனால், திடீரென கனம். எஸ். எஸ். இராமசாமி மந்திரி ஆனவுடன் நிலைமை வேறுபட்டது. இந்த ஆண்டு விழாவை கனம். மந்திரியார் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்க அவருடைய ஆதரவாளர்கள் பயன்படுத்திக் கொள்ள எண்ணி, அவர் மந்திரியான முறையைக் கண்டித்த என்னையும், என்னைப் பின்பற்றின சில முக்கியஸ்தர்களையும், வன்னியகுல மக்களுக்கு பெரும் பாடுபட்ட தோழர்களையும் நீக்கி, உண்மை விஷயங்களை வெளிப்படுத்தாமல் சங்கத்தின் பெயரால் பல மாறுதல்களுக்கிடையே இந்தப் பாராட்டுக் கூட்டத்தை, ‘மாநாடு’ என்று பெயரிட்டு நடத்திவிட்டார்கள்;

“இதற்கிடையில் ஏற்பட்ட சூழ்நிலைகளையும், பொதுவாக வன்னியகுல மக்களிடையே ஏற்பட்ட குழப்ப நிலைகளையும் உத்தேசித்து, நானும் என் தோழர்களுமான திருக்குறள் வீ. முனுசாமி, எம். பி., அவர்களும், திரு. ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்களும் 13—6—54-ல், வன்னியகுல முக்கியஸ்தர்களைக் கூட்டி, கனம். எஸ். எஸ். இராமசாமியின் போக்கைக் கண்டித்து, அதனால் பெருங்குடி மக்களாகிய வன்னியர்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும் தீங்கினை விளக்கி சில தீர்மானங்களை நிறைவேற்றினோம். 20—6—54-ல் நடைபெறவிருக்கும் மாநாட்டின் முடிவை எதிர்பார்த்து, எதிர்காலத்தில் வன்னியகுல மக்களின் போக்கை சீர்படுத்த இன்னும் சில தீர்மானங்களை நிறைவேற்றாமல் நிறுத்தி வைத்தோம்;

“20-6-54-ல் நடந்த மாநாடு ஒரு ஏமாற்றத்தை அளித்ததேயொழிய, உருப்படியான திட்டங்களை வகுத்த தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. சுருங்கச் சொன்னால், கனம். எஸ். எஸ். இராமசாமி அவர்களுக்கு ஒரு பாராட்டுத் தீர்மானமும்; தி. மு. க., கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களை வசை பாட்டு பாடியுந்தான் முடிந்தது. இது உண்மையிலேயே, தென்னாற்காடு ஜில்லா வன்னியகுல க்ஷத்திரிய மக்களுக்கு உண்மை விஷயங்களை எடுத்துக் கூறி, அவர்களின் அபிப்பிராயத்தை அறிய வழி விடாமல், ஒரு பாராட்டுப் பத்திரத்தைப் பெற வகை செய்த சூழ்ச்சி என்றுதான் சொல்ல முடியும்;

‘அன்று மாநாட்டில் உண்மையில் நடந்த விஷயங்கள் பத்திரிகைகள் வாயிலாக வெளிவந்திருக்கின்றன;

“இனி செய்ய வேண்டியதென்ன?

“எதிர்பார்த்தபடி, மாநாட்டில், உழைப்பாளி கட்சியின் எதிர்காலத்தைப் பற்றி எந்தவிதத் தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை;

“கனம். எஸ். எஸ். இராமசாமி அவர்கள் அநேக மேடைகளில், தான், காங்கிரசில் சேர்ந்துவிட்டதாகவும், உழைப்பாளி கட்சியை கூடிய சீக்கிரத்தில் காங்கிரஸ் கட்சியில் சேர்த்துவிடுவதாகச் சொல்லிவந்த விஷயமாக விளக்கிக் கூறவுமில்லை. வருகிற ஜில்லா போர்டு தேர்தலில் குறிப்பாக உழைப்பாளி கட்சியின் நிலைமையை விளக்கி யாதொரு தீர்மானமுமில்லை;

“இந்த நிலையில் வன்னியகுல மக்களின் எதிர்காலத்தை உத்தேசித்து ஏற்கனவே 13—6—54-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் ஒட்டி எதிர்காலத் திட்டம் அமைக்க 4—7—54-ல் திண்டிவனத்தில் சில முக்கியஸ்தர்களின் கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது;

“இந்த நெருக்கடியான நேரத்தில் எங்கள் முயற்சிக்கு ஊக்கமளித்துவரும் பத்திரிகை ஆசிரியர்களுக்கு—குறிப்பாக, ‘நம் நாடு’ ‘தினத் தந்தி,’ ‘திராவிடன்,’ ‘முரசொலி,’ ‘தம்பி’—இவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதல்லாமல், மேலும் மேலும் நடைபெறவிருக்கும் முயற்சிகளுக்கும் உதவி செய்து வருவார்களென்று நம்புகிறேன்.”

நம் நாடு
தி. மு. கழகத்தின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 25—6—54 வெள்ளி

ஏதேச்சாதிகாரம்!

இந்தியத் துணைக் கண்டத்தில், காங்கிரஸ் கட்சியினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள 'இந்திய ஜனநாயகக் குடியரசு' ஒரு கூட்டாட்சி அமைப்பல்ல; பல மாநில ஆட்சிகளாக பிரிக்கப்பட்டு, ஒரு ஆட்சியின் கீழ் இணைக்கப்பட்டுள்ள ஒரு இணைப்பாட்சியாகும். மாநில ஆட்சியிலும் கூட, மூன்றுவகைப் பிரிவு உண்டு. ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு விதமான அதிகார வரம்பு வகுக்கப்பட்டு, கட்டுப்பாடும் விதிக்கப்பட்டிருக்கின்றன. அது போலவே, ஒரு மாநில ஆட்சிக்கும், இந்திய இணைப்பாட்சிக்கும் உள்ள உறவு முறை பற்றியும், திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டிருக்கிறது.

மாநில ஆட்சி மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் இவை இவை, இணைப்பாட்சி ஏற்றுக்கொள்ள வேண்டிய கடமைகள் இன்னின்னவை என விளக்கமாகப் பங்கிடு செய்யப்பட்டும் உள்ளன. அத்துறைகளில் சட்டங்கள் இயற்றும் உரிமையும், தொடர்புடைய ஆட்சியமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டும் இருக்கிறது.

இவ்வாறு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ள பணித் துறைகள் ஒரு பக்கம் இருக்க, இந்திய இணைப்பாட்சியும் மாநில ஆட்சியும், ஒரே காலத்தில், மேற்கொள்ளத்தக்க பொதுவான துறைகள் இவை இவை எனவும் கூறப்பட்டுள்ளன. மேற்கூறிய மூன்று வகைக்குள்ளும் சிக்காத, எஞ்சிய துறையை இந்திய இணைப்பாட்சி அதிகாரப் பட்டியலில், சேர்த்துவிடப்பட்டும் இருக்கிறது.

மேற்கூறிய விவரங்களை, விரிவாகக் கொண்டிருக்கிறது இந்திய அரசியல் சட்டம்.

இப்போதுள்ள அரசியல் சட்டப்படி, மாநிலங்களுக்கும், நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளும் கடமைகளும் ஏராளம். ஆனால், அதற்காகும் செலவிற்கு வழி தேடுவதற்கான வாய்ப்பும் வசதியும் மட்டும் அதனிடம் கிடையாது! அத்தகைய ஏற்பாடுகளை எல்லாம் இந்திய இணைப்பாட்சி, தனக்கே உரித்தாக்கிக் கொண்டுள்ளது.

எனவே, அரசியல் சட்டத்தில் மாநில ஆட்சி, சிற கொடிக்கப்பட்ட பறவை!

வலக்கரமும், கூரிய வாளும் பறிகொடுத்து, களத்தில் கலங்கி நிற்கும் மாவீரன்—மாநில ஆட்சி!

அங்கம் சிதைக்கப்பட்டதால் அழகு சிதைந்து, அலறித் துடித்துக்கொண்டிருக்கும் பொன்னவிர் மேனியாள்—மாநில ஆட்சி!

இதுபற்றி மாநில ஆட்சி மன்றங்களிலே, முணு முணுப்பு இருந்துகொண்டு இருக்கிறது. சற்சில சமயங்களில், அம்முணுமுணுப்பு வெடித்து வெளிக் கிளம்பவும் செய்கிறது.

இத்துறையில், இந்திய இணைப்பாட்சிக்கு எதிராக மாநில ஆட்சி மன்றங்களில் தோன்றிக் கிடக்கும் சஞ்சலமும் சச்சரவும், புயலெனக் கிளம்பாமல், வெறும் சலசலப்புக் கட்டத்திலேயே இருப்பதற்கு, இணைப்பாட்சியும், அனைத்து மாநில ஆட்சியும், காங்கிரஸ் ஆதிக்கத்தின் கீழ் இருந்துவருவதே முக்கிய காரணமாகும். இதில், மாற்றம் ஏற்பட்டால், இணைப்பாட்சிக்கு, மாநில ஆட்சி மன்றங்களில் இருந்து கிளம்பும் எதிர்ப்பு புயலாக மட்டும் இருக்காது—பெரும் சண்டமாருதமாகவும் மாறிவிடக் கூடும். நிற்க,

சுதந்திர ஜனநாயக நிர்வாகத்தை உருவாக்கி, கண்காணித்து வரும் அதிகாரம் மாநில ஆட்சியைப் பொறுத்ததாகும். இதைத்தான் அரசியல் சட்டம், ஐயத்திற்குத் துளியும் இடமின்றி, எடுத்துக் காட்டுகிறது. இதில் இந்திய இணைப்பாட்சி குறுக்கிடுவது என்பது, அரசியல் சட்டத்தை மீறிய செயலாகும்.

இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் தொட்டே, அச்சட்டம் எல்லைக்குட்பட்டு செயல்பட வேண்டுமே என்ற உயர்ந்த எண்ணம், காங்கிரஸ் கட்சியினருக்கு இருந்திருக்கிறது எனச் சொல்வதற்கில்லை.

எதையாவது ஒன்றைப் புகலாகக் கூறிக்கொண்டு தங்களுக்குள்ள அதிகார வரம்பைக் கடந்துச் செல்வதைத் தான், இந்திய இணைப்பாட்சியில் பொறுப்பேற்றுள்ள காங்கிரஸ், தங்கள் தலைவர்கள் புனிதக் கடமையாகக் கொண்டுள்ளனர்.

குறிப்பிடத்தகுந்த சட்டமியற்றி இடர்ப்படவில்லையானாலும், வேறு துறையில் நெருக்கடிகளைத் தோற்றுவித்தும், செய்யப்படும் பணி உதவிக்கு நிபந்தனைகளை விதித்தும், அரசியல் சட்டத்தை மதிக்க விரும்பாத, தங்களுடைய ஏதேச்சாதிகார முனைப்பைக் காட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள், இணைப்பாட்சி பொறுப்பில் உள்ள காங்கிரஸ் கனவான்கள்!

எடுத்துக்காட்டாக ஐந்தாண்டு திட்டத்தைக் கூறலாம். தங்களுக்குச் சொந்தமாக உள்ள நிலப்பரப்பின், மாநில ஆட்சிகள் முன்னேற்றத்திற்கான வளம் கூட்டும் திட்டங்களைத் தீட்ட வேண்டுமானாலும், திட்டினவைகளை செய்து முடிக்க வேண்டுமானாலும், அவைகளுக்கு முன் கூட்டியே இந்திய இணைப்பாட்சியின் ஒப்புதலைப் பெற்றாக வேண்டும். அவ்வாறு ஒப்புதல் பெறாத ஏற்பாடுகளுக்கு, ஐந்தாண்டு திட்டத்தில் இடமும் கிடையாது; இணைப்பாட்சியின் பொருள் உதவியும் கிட்டாது. போட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியாது; நிறுதிறுனை விழிக்க வேண்டிய பரிதாப நிலை மாநில ஆட்சிகளுக்கு!

தங்களுடைய ஆதிக்க வெறியை, மாநில ஆட்சி மன்றங்கள் மீது, மறைமுகமாக, வலுக்கட்டாயமாகத் திணிப்பதற்கு, மேற்கூறிய முறை ஒரு சிறந்த சாதனமாகும். இந்த மறைமுக சாதனத்தாலும் திருப்தி பெறாத இந்திய இணைப்பாட்சி, நேரடியாகவே குறிப்பிட்ட சட்டமொன்று இயற்றுவதின் மூலம், மாநில ஆட்சிக்குள்ள உரிமையின் மீது படையெடுக்கத் திட்டமிட்டிருக்கிறது.

அதாவது மாநில ஆட்சிக்கே உரித்தான ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் குறுக்கிட்டு, மக்கள் சபையில் ஒரு சட்டம் இயற்றுவது என இந்திய இணைப்பாட்சி சதியாலோசனை செய்து கொண்டு இருக்கிறது. இத்தகைய சட்டத்திற்கு என்ன அவசிய மேற்பட்டது என்பதையும், இதில் ஏதாவது துளி நியாயம் இருக்கிறதா என்பதையும், அரசியல சட்ட விதிகளுக்கு விரோதமாக உள்ளதே என்பதையும், இந்திய இணைப்பாட்சி பொறுப்பில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் கருத்திட்டுக்கொண்டதாகத் தெரியவில்லை.

மாநிலங்களில் உள்ள ஸ்தல ஸ்தாபன அமைச்சர்களின் மாநாடு ஒன்று அண்மையில் சிம்லா நகரில் கூட இருக்கிறது. அம்மாநாட்டில், மேற்கூறிய ஏதேச்சாதிகாரமாக சட்டமியற்றும் விஷயமும் ஆராயப்படுமெனத் தெரிகிறது. அதுபற்றி, திரு—கோச்சி ஸ்தல ஸ்தாபன அமைச்சர் கூறியுள்ள கருத்தை, நேற்று நாம் வெளியிட்டுள்ளோம்.

அவருடைய கருத்து, புதிய காங்கிரஸ் பக்தரான, சென்னை ஸ்தல ஸ்தாபன அமைச்சர் கனம் எஸ். எஸ். ராமசாமிக்கு ஏற்புடையதாக இருக்குமோ இருக்காதோ, யார் கண்டார்கள்?

அமைச்சர் என்ற முறையில், உல்லாசமாக சிம்லா நகரம் வந்து போகிறோமே என்ற உள்ளப் பூரிப்பில், மாநில உரிமையை விட்டுக் கொடுக்க அமைச்சர் ஒப்புக் கொண்டாலும் ஒருவரும் ஆச்சரியப்படமாட்டார்கள்!

டில்லியின் ஏதேச்சாதிகாரம், இனியும் எங்கெந்தத் துறையில் தலைவிரித்தாடப் போகிறதோ? தட்டிக் கேட்கிறவரையில், காங்கிரஸ் தலைவர்களின் ஏதேச்சாதிகாரம் நீடிக்கத்தான் செய்யும்! நீடிப்பதோடு மட்டுமல்லாமல் வளரவும் செய்யும்!

இந்திய மயிலாசன வைரம்

லண்டனில் விற்கப்பட்டது!

டில்லியில் 17-ம் நூற்றாண்டில இருந்த மொகலாய அரசர்களுடையது என்று சொல்லப்படுகிற மயிலாசனத்தின் மயில் தலையில் இருந்த புகழ்பெற்ற தெனப்படும் 305 காரட் வைரமான ஜெகாங்கீர் வைரம் லண்டனில் 13,000 பவுன்களுக்கு விற்கப்பட்டது.

அந்த வைரத்தை வைத்திருந்தவர் பர்துவான் மகாராஜா பகதூர் ஆவார்.

அவ்வளவு விலை கொடுத்து அந்த வைரத்தை வாங்கிய மனிதர் தனது பெயரைச் சொல்ல மறுத்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

'அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லை!'

'ஊழல் மலிந்துவிட்டது — ஒழுக்கம் குன்றிவிட்டது!'

மத்ய பாரத் சர்க்கார்மீது இந்து சபை பாய்ச்சல்!

இந்தூர், ஜூன் 22—

மத்திய பாரத் மாநில இந்து மகா சபையினர் தங்கள் வருடாந்திரக் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஒன்றில், மத்ய பாரத் காங்கிரஸ் அரசாங்கத்தின்மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிவித்துள்ளனர். அந்தத் தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

இன்றுள்ள அரசாங்கம் மக்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானதெனக் கொள்ள முடியாது. அரசாங்கம் தனது பொறுப்பையும் கடமையையும் தனது வாக்காளர்களுக்குச் சரிவர நிறைவேற்றவில்லை.

நிர்வாகத்தில் மலிந்து கிடக்கும் ஊழலையும் லஞ்சத்தையும் அரசாங்கம் ஒழிக்க இயலவில்லை எனக் குற்றம் சாட்டுகிறோம். நாட்டில சட்டத்தையும் அமைதியையும் கூட அரசாங்கத்தால் சரிவரப் பாதுகாக்க இயலவில்லை.

மேலும், பைந்து, மொரேனு ஆகிய மாவட்டங்களில் நிகழும் கொள்ளை சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு தன்னாலாகவில்லை என்றும் அரசாங்கம் காட்டிக்கொண்டுள்ளது.

இன்னும் காங்கிரஸ் பிரச்சாரத்திற்காக மக்கள் வரிப் பணத்தை அரசாங்கத்தினர் செலவு செய்திருக்கிறார்கள்."

இப்படி அந்தத் தீர்மானத்தில் விரிவுள்ள குற்றச்சாட்டுகளில இன்னும் சில உயர்நிலைப் படியில் பல்கலைக் கழகத்தின் இடங்களை சரிவர நிரணயிக்காததால் நாட்டில் ஏற்பட்ட குழப்பம், ராஜ்ய அலுவலகங்களில ஆள் குறைப்பு அமுலாக்கியதில் காட்டப்பட்ட பாரபட்சம் நிர்வாகத்தில் நிலவும் ஊழல்கள் இவைகளும் ஆகும்.

'ஜார்கண்ட்' மாநிலம் காண கோரிக்கை!

ரஞ்சி, ஜூன் 24—

ஜார்கண்ட் கட்சியின தலைவரான ஜெய்பால் சிங் என்ற மக்கள் சபை உறுப்பினர் மாநில புனரமைப்புக் குழுவினரிடம் சோடா நாக்பூர் ராஜ்யங்களைக் கொண்ட ஜார்கண்ட் என்ற புதிய மாநிலம் அமைக்கக் கோரி அறிக்கை ஒன்றைத் தந்துள்ளதாகத் தெரிகிறது.

அவர், அந்த ராஜ்யங்கள் 1948-ல் அநியாயமாக ஒரிசாவிலும், மத்திய பிரதேசத்திலும் இணைக்கப்பட்டன என்று கூறியுள்ளார்.

அவர், 'ஜார்கண்டில் புதிய ஒரு மாநிலம் அமைப்பது இந்திய நலன்களுக்கு விரோதமானது என யாரேனும் எடுத்துக் காட்டினால் எனது தவறை நான் திருத்திக் கொள்கிறேன்," என்றும் கூறியுள்ளதுடன், சோடா நாக்பூர், 'பிளாடியூ' பிரதேசங்களின் ஒற்றுமை எவ்வகையிலும் சிதைக்கப்படக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அடிமைகளென்று எண்ணுவதோ!

கூலிகளெனக் கருதும் போக்குக்குக் கண்டனம்

"நிர்ப்பந்தத்தினாலும் மிரட்டலினாலும் இந்திய பிரஜா உரிமை பெறும்படி செய்யப்படும் இலங்கை இந்தியர்களை இந்திய சர்க்கார் பதிவு செய்யாது; இந்தப் பிரச்சினையை ஜீவகாருண்ய அடிப்படையில் தீர்க்க முற்பட வேண்டும்,"

இவ்வாறு இந்திய சர்க்கார் இலங்கை சர்க்காருக்கு அனுப்பியுள்ள ஒரு ஆட்சேபக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

அக்குறிப்பு மேலும் கூறுவதாவது:—

"இந்தியத் தொழிலாளர் விரும்பினால், இலங்கை சர்க்கார் அவர்களுக்குப் பிரஜா உரிமை அளிக்க வேண்டும்—அவர்கள் பற்றிய முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும்; இந்தியத் தொழிலாளர்களின் ஊழியமும் வேண்டும்—அவர்கள் அடிமையாகவும் இருக்க வேண்டும் என்பது முடியாது; இந்தியத் தொழிலாளர்கள் கூலிகளாக இலங்கையில் வேலை செய்வதை இந்திய சர்க்கார் அனுமதிக்கப் போவதில்லை."

இந்தியாவுக்கு அமெரிக்க உதவி

ஆலன் விளக்கம்

புதுடில்லி, ஜூன் 21—

இந்தியாவுக்கு இந்த ஆண்டில் அமெரிக்கா தர இருக்கும் உதவித் தொகையான 49½ கோடி ரூபாய்களில் ரூ 21 கோடி பொருளாதார உதவி மூலமும், ரூ 19 கோடிகோதுமை, பருத்தி போன்ற விவசாயப் பொருள்களாகவும், ரூ 9 கோடி தொழில் நுணுக்க உதவி மூலமும் அளிக்கப்படும் என்று இந்தியாவில் அமெரிக்கத் தூதுவரான ஜார்ஜ் ஆலன் கூறுகிறார்.

அமெரிக்க பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில், ஆலன், "தொடர்ந்து இந்தியாவுக்கு உதவி அளிப்பது அறிவுடைமை யாகுமா?" என்ற கேள்விக்கு, 'ஆம்' என்று பதில் அளித்தார். "அது மட்டுமல்ல; பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி அளிக்கும் போது இந்தியாவுக்கு அளிக்கும் உதவியை நிறுத்தி விட்டால், அமெரிக்காவிற்கு இராணுவ நோக்கமே உள்ளது,' என்று குற்றஞ் சாட்ட பலருக்குவாய்ப்பு ஏற்படும்," என்று அவர் மேலும் கூறினார்.

தேனீக்கள் படையெடுப்பு

பஞ்சாயத்தார் ஓட்டம்

வல்லயபட்டி கிராமத்தில் ஊர்ப் பஞ்சாயத்துக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தபோது தேனீக்கள் படையெடுத்து பஞ்சாயத்தாரை நோக்கி வந்ததைக் கண்ட பஞ்சாயத்தார் திடீரென கூட்டத்தை முடித்துக்கொண்டு ஓட வேண்டியதாயிற்று.

பொதுக் கூட்டம்

20—6—54 மாலை, மலபார் ஆலைத் தொழிலாளரின்போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் வடவள்ளி ஜமீன்பாரத் தி.மு. கழகச் சார்பில் ஒரு பொதுக் கூட்டம், போரூர் நடேசனாரின் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோபால், ராமு, ஆலைச் சங்கத் தலைவர் முனுசாமி, பொன்னுச்சாமி, கஞ்சி சம்பந்தம், 'திராவிட நாடு' அரங்கண்ணல், ஆகியோர் பேசினர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

முன்னணிவீரர்கள் முழக்கம்

தோழர்கள் ஈ.வெ.கி. சம்பத், அப்பாவு சுற்றுப் பிரயாண நிகழ்ச்சிகள்

★

கொடுமுடி

2-6-54 மாலை 7 மணியளவில் தி. மு. கழகச் சார்பில் பெரிய கோவில் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் நடராசன் தலைமை வகித்தார். தோழர்கள் என். அப்பாவு, ஈ. வே. கி. சம்பத் இருவரும் புதிய கல்வித் திட்ட ஒழிப்பு குறித்தும் கழக கொள்கைகள் குறித்தும் பேசினர். இறுதியாக தோழர் சி. பி. சிற்றரசு சமுதாயம், அரசியல், கழகக் கொள்கைகள் குறித்து விரிவுரையாற்றினார்.

★

கணியூர்

4—6—54ல், கணியூரில் தோழர் கே. ஏ. கிருட்டிணசாமி தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் அழகிரி திடலில் நடைபெற்றது. தோழர்கள் என். அப்பாவு, ஈ. வே. கி. சம்பத், புதிய கல்வித் திட்டம் ஒழிந்தது குறித்தும், கழகக் கொள்கைகள் குறித்தும் பேசினர்.

★

புது ஆயக்குடி

5—6—54 இரவு 7 மணிக்கு தி. மு. கழக சார்பில் புதிய கல்வித் திட்டம் ஒழிந்த வெற்றி விழாப் பொதுக் கூட்டம் மந்தை வெளி மைதானத்தில் நடைபெற்றது. தோழர் பழனி தமிழரசு தலைமை வகித்தார். தோழர்கள் என். அப்பாவு. ஈ. வே. கி. சம்பத் பேசினர்

★

ஆண்டிப்பட்டி

7—6—54 இரவு 8 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் புதிய கல்வி திட்டம் ஒழிந்த வெற்றி விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மதுரை தோழர் கே. என். இராசமான் தலைமை வகித்தார். தோழர்கள் உசிலை தம்பி, என். அப்பாவு ஆகியவர்கள் கழகக் கொள்கை குறித்து பேசிய பின் தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் தனியரசு தேவை, சமுதாய நிலை குறித்து பேசினர்.

★

குழிலியம்பாறை

8—6—54ல் பாளையம் கிராமம் தி. மு. கழகச் சார்பில் குழிலியம்பாறையில் பொதுக் கூட்டம் நடந்தது. சாணிபட்டி, கனிக்காணியூர், விழுப்பட்டி, வீராணிப்பட்டி, பாளையம், எருதிகோன்பட்டி, சேர்வைகாரன்பட்டி, சத்திரப்பட்டி, போடிப்பட்டி, புலியம்பட்டி, அம்மாப்பட்டி, இராமகிரி, கொல்லப்பட்டி ஆகிய கிராமங்களிலிருந்து கிராம மக்கள் தாரை, தப்பட்டை முதலிய வாத்தியங்களோடு ஊர்வலமாக வந்து கூட்டத்தில் கலந்து கொண்டனர். குழிலியம்பாறை என்ற அந்த சிற்றூரில் 5000-க்கு மேற்பட்ட விவசாயிகளும், பெருங்குடி மக்களும், தாய்மார்களும் ஆர்வத்தோடு குழுமியிருந்தனர். பொதுக் கூட்டம் இரவு 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. தோழர் வி. வி. சாமி தலைமை வகித்தார். தோழர்கள் எம். கே. ஏ. சாமி, திண்டுக்கல் சமதர்மம், வீராசன், ஈரோடு என். அப்பாவு ஆகியவர்கள் கழகக் கொள்கைகள் குறித்தும், தனிநாடு தேவை குறித்தும் பேசினர். இறுதியாக தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் பேச எழுந்ததும் கழகத் தோழர்களும், நாடார் வாலிபர் சங்கத்தவரும் மலர்மாலை அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டனர். தோழர் சம்பத் அவர்கள் பேசுகையில் கூட்டத்தை ஏற்பாடு செய்த தோழர்களைப் பாராட்டியும், கூடியுள்ள மக்களின் ஆர்வத்துக்கு மகிழ்ச்சி தெரிவித்தும், புதிய கல்வித்திட்ட ஒழிப்பு, சமுதாய, அரசியல், பொருளாதார நிலையை விளக்கியும், தனியரசு தேவை குறித்தும் பேசினார்.

★

இடையக்கோட்டை

9—6—54 இரவு 7 மணிக்கு இடையக்கோட்டை தி. மு. கழகத் துவக்கவிழாப் பொதுக் கூட்டம் குமாரமுத்து திடலில் நடைபெற்றது. மாலை 6 மணிக்கு பல கிராமங்களிலுமிருந்து குறிப்பாக சவ்வாதுபட்டி, மண்டவாடி, சோலியப்பகவுண்டனூர், பள்ளப்பட்டி, சின்னக்காம்பட்டி, வலையபட்டி, கல்லுப்பட்டி, குமெம்பட்டி, கோட்டைப்பட்டி, புதூர் கிராமங்களின் இருந்து வந்த கழகத் தோழர்கள் ஊர்வலமாக முக்கியத் தெருக்கள் வழியாக வந்தனர். ஊர்வலத்தில் பல இடங்களில் ஈரோடு தோழர் என். அப்பாவு கழகக் கொடியை ஏற்றினார். ஊர்வலத்தில் சில தோழர்கள் உயில் கும்மிப் பாடி ஆட்டம் ஆடிவந்தார்கள். கூட்டம் 7 மணிக்கு துவங்கியது. பழனி நகர் சாமி சிவநேசம் கூட்டத்திற்கு தலைமை தாங்கி சொற்பொழிவாற்றினார். பின்னர், தோழர்கள் வீராசன், பழனியப்பன், அம்மையப்பன், பன்னீர் செல்வம், திண்டுக்கல் சமதர்மம், அனிபா, என். அப்பாவு ஆகியவர்கள் கழகக் கொள்கைகள் குறித்துப் பேசினர் இறுதியாகத் தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் சமுதாயம், அரசியல், வடநாட்டு ஆதிக்கம், இலங்கை தமிழர் துயர், தனியரசு கோரிக்கை குறித்து பேசினார். செயலாளர் பதி, தோழர் கரிகாலன் கூட்டத்தை திறம்பட நடத்தி வெற்றி கண்டார்கள்.

★

காட்டுப்புத்தூர் :

11—6—54 மாலை 7 மணிக்கு தி. மு. கழகப் பொதுக் கூட்டம் தோழர் தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் என். அப்பாவு புதிய கல்வித் திட்டம் ஒழிந்த மகிழ்ச்சி குறித்தும், திராவிடத் தனியரசு கோரிக்கை குறித்தும் பேசினார். பின்னர் தோழர் ஈ. வே. கி. சம்பத் தென் குட்டின் இன்றைய நிலை குறித்தும், மத்திய சர்க்கார் ஆதிக்கம் குறித்தும், இலங்கை வாழ் தமிழர்கள் நிலைக்கு ஆக்கம் தேட திராவிட தனியரசு சர்க்கார் அமைய வேண்டும் என்றும் கூறி முடித்தார்.

★

மேட்டுப்பாளையம்

12—6—54ல், திருச்சி மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் தோழர் ராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. என். அப்பாவு புதிய கல்வித் திட்டம் ஒழிந்தது குறித்தும், திராவிடத் தனியரசு தேவை குறித்தும் பேசினார்.

துறையூர் ரங்கசாமி எம். எல். ஏ., தனது தொகுதி மக்கள் நிலை குறித்தும், சட்ட சபை நிகழ்ச்சி குறித்தும் பேசினார்.

தோழர் ஈ. வே. கி. சம்பத் தி. மு. கழகம் நடத்திய கல்வித் திட்டப் போராட்டம், கல்லக்குடி போராட்டம், ரயில் நிறுத்தப் போராட்டம் குறித்தும், டில்லி சர்க்காரின் ஆதிக்கம், சுரண்டல் குறித்தும், திராவிட தனியரசுக்கு மக்கள் ஆதரவு தரவேண்டும் பேசினார்.

★

துறையூர்

13—6—54ல், அரண்மனை மைதானத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் முன்னாள் கழகச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. பி அழகமுத்து, என். அப்பாவு, துறையூர் ரங்கசாமி எம். எல். ஏ., ஆகியவர்கள் புதிய கல்வித் திட்டம் ஒழிந்தது குறித்தும் பேசினார்கள். தோழர் ஈ. வே. கி சம்பத் புதிய கல்வித் திட்டம் ஒழிந்த வெற்றி குறித்தும், கம்யூனிஸ்டு கட்சி தலைவர்களின் பொய் பிரசாரம் குறித்தும், வடநாட்டு ஆதிக்கம் எந்த அரசியல் கட்சியின் உருவில் வந்தாலும் மக்கள் அவைகளை முறியடிக்கவேண்டும் என்றும், திராவிட தனியரசு தேவை குறித்தும் பேசினார்.

★

மாறண்டஹள்ளி

18—6—54 மாலை 7 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் பொதுக் கூட்டம் போலீஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள திடலில் நடைபெற்றது. தோழர் பாட்சா தலைமை வகித்தார் தோழர்கள் தர்மபுரி குப்புசாமி. என். அப்பாவு இருவரும் கழகக் கொள்கைகள் குறித்துப் பேசினர்

பின்னர் தோழர் ஈ. வே. கி. சம்பத் சமுதாயம் குறித்து விளக்கமாகப் பேசி, தனிநாடு தேவையை வலியுறுத்தினார்.

செய்திச் சுருள்

காமராசருக்கு பாராட்டு

தண்ணீர்பற்றுக்குறைபட்டாளம் கோட்டைக்கு படையெடுப்பு (ஊர்வலம்) நடத்த முடிவு!

சென்னை, ஜூன் 21—

நேற்று மாலை 48 வது டிவிஷன் சைதாப்பேட்டையில் பொதுக் கூட்டம் ஒன்று தோழர் எம். கன்னியப்பன் தலைமையில் நடைபெற்றது. தலைவர் பேசுகையில் ஆச்சாரியார் ஏதேச்சாதிகாரமாக திணித்த கல்வித் திட்டத்தை, காமராசர் முதன் மந்திரி பதவி பெற்றவுடன் ரத்து செய்ததை வரவேற்று பாராட்டினார். இதர இடங்களில் ஏற்பட்டுள்ள தண்ணீர் பஞ்சம் சென்னை சைதாப்பேட்டையிலும் அதிகரித்து வருவது கண்டு தாம் வருந்துவதாகவும், ஒரு குடம் தண்ணீர் 1 அணு என்று விற்பதாகவும் குறிப்பிட்டார்.

தோழர்கள் எ. கே. சாமி எம். சி., ராமநாதன், டாக்டர் எரிம் எம். சி., எ. ஓ பழனி, கே. கே. சாமி (ஆசிரியர் ஆராய்ச்சி மணி) டி. பி. என். வடிவேல். நாகப்பன், சண்முகம் எம். சி ஆகியவர்களும் சொற்பொழிவாற்றினர்.

பின்னர் உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாக செலவைச் சென்னை நகர சபைக்கு ஆண்டு விழும் ரூபாய் $1\frac{1}{2}$ லட்சத்தை ஈடு செய்ய மானியமாகக் கொடுக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொண்டும், நகரசபை ஆரம்பப் பாடசாலைகளில் 5 வது வகுப்பில் தேறிய மாணவர்களை நகர சபை உயர்நிலைப் பள்ளிகளில் 1 வது பாரத்தில் சேர்க்க வடிகட்டும் வகையில் மற்றோர் தேர்வு நடத்துவதை வன்மையாகக் கண்டிப்பதுடன், 5 வது வகுப்பில் தேறியவர்களை எவ்வித நிபந்தனையுமின்றி 1 வது பாரத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டும், 8-2 53 ல் நகர சபையில் நிறைவேற்றியிருக்கிற பாதாள சாக்கடை திட்டத்தை உடனடியாக அமுல் நடத்துமாறு நகர சபையைக் கோரியும், டிராம்வேயை ஏற்று நடத்துமாறு நகர சபையைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், தண்ணீர் பற்றுக் குறையை உடனடியாகத் தீர்க்காவிட்டால் சைதாப்பேட்டையிலிருந்து சென்னை கோட்டைக்குக் குடங்களுடன் தண்ணீர் பற்றுக்குறை பட்டாளம் (அணிவகுப்பு) ஊர்வலம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

நாகை அழகிரி சொற்பயிற்சி மன்றம்

11—6—54 மாலை 6 மணிக்கு நாகை தி. மு. கழகக் கட்டிடத்தில் அழகிரி சொற்பயிற்சி மன்றத்தில், "சமுதாயத் துறையில் தி. மு. கழகம்" எனும் பொருள் பற்றி பயிற்சி வகுப்பு நடைபெற்றது. பயிற்சியில், தோழர்கள் பலர் பங்கு கொண்டனர்.

* * *

20—6—54 மாலை 6 மணிக்கு "பொருளாதாரத் துறையில் தி. மு. கழகம்" எனும் பொருள் பற்றிய சொற் பயிற்சி வகுப்பு தோழர் சதாசிவம் தலைமையில் நடைபெற்றது. பயிற்சியில் மாணவர்களும் இளைஞர்கள் பலரும் ஆர்வம் காட்டியது குறிப்பிடத்தக்கது.

சென்னை மஜீத் மன்றம்

சென்னை 12-வது வட்டம் மஜீத் மன்றத்தில், 9—11—54 மாலை 7-30 மணி யளவில், தோழர் அப்துல் ரசாக் தலைமையில், கமிட்டி கூட்டம் நடைபெற்றது. 1954 மார்ச்சு முதல் மே முடிய மூன்று மாதத்திய மன்றத்தின் வரவு-செலவு கணக்குகள் சரி பார்க்கப்பட்ட பின், மன்றத்தின் ஆக்க வேலைகளைப் பற்றி ஆலோசிக்கப்பட்ட பின், மணப்பாறை தோழர் குமாரவேல் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சங்கரன் படிப்பகம்

உறையூர், ஜூன் 17—

திருச்சி உறையூர் மேட்டுத் தெரு தோழர் வேணுகோபால் இல்லத்தில் 11—6—54 இரவு 8 மணிக்கு தோழர் எம். என். மணி தலைமையில் சங்கரன் படிப்பகத்தின் தேர்தல் நடைபெற்றது.

தலைவர் உரைக்குப் பின் தோழர் எம். என். பிச்சை தலைவராகவும், டி வேணு செயலாளராகவும், டி. முத்துச்சாமி துணைச் செயலாளராகவும், கே. ராஜாராம் பொருளாளராகவும், எம். மகாலிங்கம், என் சின்னதுரை, டி. முத்துசாமி, தங்கவேலு ஆகியோர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அழகிரி நினைவுபடிப்பகம்

19—6—54 மாலை 5 மணிக்கு பொதும்பூர் கிராமம் அழகிரி நினைவுப் படிப்பகம் பொதுக்குழு கூட்டம் தோழர் வே சோமநாதன் தலைமையில் நடைபெற்ற போது, கிராமத்தின் ஏழை பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக கரும்பலகை வழங்குவதென்று முடிவு செய்யப்பட்ட பின் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: வி. பி முத்து; துணைச்செயலாளர்: என். டி பாண்டியன்; பொருளாளர்; ச. பழனிச்சாமி; மாவட்டப் பிரதிநிதி: வி. பி. இருளப்பன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கதா காலட்சேபம்

17—6—54 மாலை 8 மணிக்கு கோத்தகிரிக்கு அருகாமையில் துள்ள ப்ராண்டல் எஸ்டேட்டில் தோழர் கே. சீனிவாசன் தலைமையில், தோழர் நா. பொன்னையா "கலப்பு மணம்" என்ற கற்பனைக் கதையை கதா காலட்சேபமாக நடத்தினார்.

வெற்றி விழா

திருப்பூவணம் புதூர் வள்ளுவர் படிப்பகத்தின் சார்பில், புதிய கல்வித் திட்டம் ஒழிந்தமைக்கு 19—6—54ல் எலிமெண்டரி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழக 2-வது

சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

ஜூன் மாதம் 26, 27-ந் தேதிகளில் வேலூர் டவுன் ஸ்டேஷனுக்கு எதிரில் அமைத்துள்ள அழகிரி பந்தலில் — மூத்து அரங்கில் நடைபெறும்

26—6—54 சனி:	27—6—54 ஞாயிறு:
சமூக சீர்திருத்த மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர்: ஈழத்து அடிகள்	தலைவர்: கே. ஏ. மதியழகன்
திறப்பாளர்: இரா. நெடுஞ்செழியன்	திறப்பாளர்: நாஞ்சில் கி. மனோகரன்

இரு நாட்களிலும் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், முன்னணி வீரர்களும், திராவிட சட்ட சபை எம். எல். ஏ.-க்களும் கலந்துகொள்வர்

இசை முரசு நாகூர் அனிபா குழுவினரின் இசை விருந்து இரு நாட்களிலும் நடைபெறும்

இரு நாட்களிலும் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும்

'அம்மையப்பன்,' 'சந்திரமோகன்' நாடகங்கள் நடைபெறும்

இரண்டு நாட்களுக்கும் கட்டணம் (நாடகங்கள் உட்பட): ரூ. 5, 3, 2, 1; பெண்களுக்கு அணு 8

—வரவேற்புக் குழுவினர்

உலக அரங்கில்

பாரிஸ் :

பிரெஞ்சு சட்ட சபையில் ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தத்தை அங்கீகரித்துள்ள நாடுகள் மீண்டும் அந்த ஒப்பந்தத்தில் மாறுதல் செய்ய முடியுமா என்று ஆலோசிக்குமாறு அந்த நாடுகளைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றை உள்நாட்டு அமைச்சர் எட்மண்டு பிரரேபித்தார்.

★

வாஷிங்டன் :

ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தம், சம்பந்தப்பட்ட நாடுகளால் ஒப்புக் கொள்ளப்பட்டவுடன் மேற்கு ஜெர்மனியின் சுதந்திரத்திற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் டல்லஸ் கூறினார்.

* * *

இத்தாலி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்க அதிகாரிகளின் தாய் நாட்டுப் பற்றையும், அவர்களது புனிதத்தன்மையையும் சோதிக்க ஒரு குழுவினரை சீக்கிரமே அமெரிக்கா சர்க்கார் அனுப்ப இருக்கிறது.

★

லண்டன் :

காமன்ஸ் சபையில் ஜினிவா பேச்சுக்கள் பற்றிய ஈடன் சொற்பொழிவின் கருத்தை சோவியத் வெளிநாட்டமைச்சர் மாலடோவிடம் தெரிவிக்க பிரிட்டனில் உள்ள சோவியத் தூதவர் ஜாகோப்மாலிக் மாஸ்கோ சென்றிருக்கிறார்.

* * *

கென்யாவில் இதுவரையில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்த மாவ் மாவ் இயக்கத்தினர் 179 பேர் தூக்கிலிடப்பட்டதாக காமன்ஸ் சபையில் ஆலிவர்லிடில்டன் அறிவித்தார்.

* * *

பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும், ஈடனும் பி. ஓ. ஏ. ஸி. விமான மொன்றில் வாஷிங்டனுக்குப் புறப்பட்டனர்.

★

பெர்த் :

ஆஸ்திரேலியாவின் முக்கிய எண்ணெய்க் கம்பெனியான 'மேற்கு ஆஸ்திரேலிய பெட்ரோலியம் கம்பெனி'யில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

★

ஜினிவா :

இந்தோ - சீனா இரகசிய மாநாட்டின் 18-வது கூட்டம், பிரெஞ்சுப் பிரதிநிதி கலந்து கொள்ளாததால் ஒத்திப் போடப்பட்டது என்று தெரிகிறது.

• • •

பிரான்ஸ், கம்போடியா, வியட்மின் நாடுகளின் பிரதிநிதிகள் வியாழனன்று முதல் தடவையாகச் சந்தித்துப் பேசினார்கள்.

★

ரோம் :

புதன்கிழமையன்று நடைபெற்ற இத்தாலியப் பாராளுமன்ற கூட்டத்தில் இத்தாலிய சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கையை ஆதரிப்பதாக தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

★

கெய்ரோ :

சீனப் பிரதமர் சூ-என்-லாய் டில்லி செல்லும் வழியில் கெய்ரோ வந்து சேர்ந்தார். எகிப்து, சீனாவை அங்கீகரிக்காத நாடு. எகிப்திய மக்களைப் பாராட்டி சூ-என்-லாய் விமான நிலையத்தில் அறிக்கை ஒன்று வெளியிட்டார். இவரது வருகையை ஒட்டி ஏராளமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நியூயார்க் :

உலகில் மிகவும் சிறப்புடையவரும் திறமைசாலியுமான டாக்டர் கார்ல் காம்ப்டன் என்பவர் மாரடைப்பினால் தனது 66-வது வயதில் மரணமடைந்தார் என்று தெரிகிறது.

★

பெல்கிரேட் :

ஐ. நா. சபைத் தலைவி திருமதி விஜயலட்சுமி பண்டிட், மாசிடோனியாவின் தலைநகரான ஸ்கோபிள்ஜிக்கு வந்து சேர்ந்தார் என்று தெரிகிறது. பின்னர் அவர் சராஜிவோ செல்வார் என்று தெரிகிறது.

★

வியன்னா :

சோவியத் நாட்டு இராணுவத்தினரான விளாடிமிர் வசிலிவிச் என்பவருக்கு, அமெரிக்கா, அரசியல் புகலிடம் அளித்திருப்பதாக வியன்னாவில் உள்ள அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார்.

★

பான் :

ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தம் நிறைவேறினால் மேற்கு ஜெர்மனி அதற்காக 950 மில்லியன் மார்க்குகள் (ஜெர்மன் நாணயம்) தரும் என்று நேசநாடுகளின் இராணுவ காரியாலயம் அறிவிக்கிறது.

★

தெஹ்ரான் :

இரான் நாட்டிற்கு ரயில்வே சாமான்கள் 1 லட்சம் டன் அனுப்புவதற்கு பிரிட்டிஷ் யுனைட்டெட் ஸ்டீல் கம்பெனி ஈரான் சர்க்காருடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. அமெரிக்கா, பெல்ஜியம் போன்ற நாடுகள் இந்த ஒப்பந்தத்துக்காகப் போட்டியிட்டதாம்.

★

லியூனபர்க் :

ரைன் பிரதேசத்திலுள்ள பிரிட்டிஷ் இராணுவத்தைப் பார்வையிட எடின்பரோ கோமகன் தனது சொந்த விமான மூலம் லியூனபர்க் வந்து சேர்ந்தார்.

★

பெல்சிஸ் :

எதிர்ப் படைகளை முறியடித்துப் புறமுதுகு காட்டி ஓடச் செய்துவிட்டதாக குவாடிமாலா இராணுவக் காரியாலயம் அறிவிக்கிறது.

★

ஹாண்டுராஸ் :

குவாடிமாலா எல்லையோரம் உள்ள ஹாண்டுராஸ் நகரில் அடையாளம் தெரியாத விமானங்கள் குண்டு வீசின என்று ஹாண்டுராஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

★

மெக்சிகோ :

குவாடிமாலாவைப் பிடிக்க முயன்று மூன்று முனைகளில் தாக்குதல் நடத்திய கர்னல் அர்மாஸின் படை 24 மணி நேரத்தில் தளர்ந்துவிட்டது என்று தெரிகிறது.

19 பேர் மூழ்கினர்

காஷ்மீரில் படகு கவிழ்ந்தது

ஜம்மு, ஜூன் 24—

சீனாப் நதியில் சென்று கொண்டிருந்த படகு ஒன்று கவிழ்ந்தது. காஷ்மீர் சர்க்கார் அதிகாரிகள் மூவர் உள்பட 19 பேர் மரணமடைந்தனர்.

முப்பது ஆண்டுகளாக இது போன்ற துக்ககரமான நிகழ்ச்சி நடைபெறவில்லை எனத் தெரிகிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு படகு கவிழ்ந்து 60 பேர் மாண்டனராம்.

'எமது உரிமை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லாம் அவனுடைய ஒழுக்கத்தால், நற் பண்பால்தான்; வள்ளுவர்கூட, ஒழுக்கத்தை, 'மானிடப் பண்பு' என்றே குறிப்பிடுகிறார்.

"அந்த மனிதப் பண்பினால் தான் — ஒழுக்கத்தினால்தான் மனிதன் இயற்கையை தனக்குச் சாதகமாக ஒழுங்குபடுத்திக் கொள்ள முடிகிறது.

"எழுச்சியுற்ற மனிதன் இயற்கையை ஒழுங்குபடுத்தியவுடன் தொடர்ந்தும் எழுச்சியையும்—எதிர்ப்பையும் சந்தித்து வந்திருக்கிறான்.

"குறிப்பாக, எங்கெங்கே, ஆதிக்கம்—ஒன்றின்மீது இன்னொன்றின் ஆதிக்கம் இருக்கிறதோ, அங்கெல்லாம், அந்த ஆதிக்கத்தை ஒழிக்க எழுச்சியும் — அந்த எழுச்சிக்கு எதிர்ப்பும் இருப்பதைக் காணலாம்.

"வலுவுள்ளவன் இல்லாதவனை அடக்கி ஆளவும், அறிவுள்ளவன் இல்லாதவனை அடக்கி ஆளவும், நிலைமைகள் இருப்பதைப் பார்க்கிறோம்.

வலுவுள்ளவன், கையில், கோல் வைத்திருக்கிறான் — —ஆதிக்கச் சின்னமாக! அந்த ஆதிக்கக் கோலால் பலரை ஆட்டிப் படைக்கிறான்! அந்த ஆதிக்கக் கோல், இன்னமும் உலகில் — எலிசபெத் ராணியின் கையில் இருப்பதைக் காண்கிறோம்!

"அடக்கி ஆளும் கோல் நீதியானதாயிருந்தால் அது 'செங்கோல்' எனவும், அநீதியானதாயிருந்தால் அது 'கொடுங்கோல்' எனவும் வழங்கப்படுகிறது.

"இப்படி எந்தத் துறையிலாயினும் சரி—அறிவியல், மத இயல், சமூக - பொருளாதார - அரசியல் ஆகிய எத்துறையிலாயினும்—ஆதிக்கம் செலுத்துபவர்களும், அடக்கி ஆளப்படுபவர்களும் இருந்தால், ஆதிக்கக்காரர்களை ஒழித்து, தாம், விடுதலை பெற, அடக்கி ஒடுக்கப்பட்டிருப்பவர்கள் எழுச்சியுறுவது இயற்கையே! அந்த நியாயமான இயற்கை எழுச்சிக்கு, எதிர்ப்புக் காட்டப்பட்டாலும், எதிர்ப்புகள் எல்லாம் எழுச்சியின் முன் ஏதும் செய்ய ஒண்ணுதலாது போய் முடிவில் எழுச்சிகள் வெற்றி பெற்றிருப்பதையே காண்கிறோம்"

தொடர்ந்து பேசுகையில், தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் வரலாற்றை பல வேறு கால கட்டங்களாகப் பிரித்து, இந்தியாவில் ஏற்பட்ட எழுச்சிகளையும், எதிர்ப்புகளையும் எடுத்துக்காட்டிவிட்டு, கடைசியாக இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட வெள்ளை ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற இந்தியர்கள் வெகுண்டெழுந்த எழுச்சியின் வரலாற்றையும் விளக்கிச் சொல்லி, இன்றைய திராவிடத்தின் எழுச்சி குறித்துப் புள்ளி விவரங்களுடன் விளக்கினார்.

தென்னாட்டவர் சமுதாயத் துறையில் எழுச்சியுற்ற சரித்திரத்தையும் குறிப்பிட்டு, வடநாட்டு ஆதிக்கப் பிடியிலிருந்து திராவிடர் சமுதாயம் விடுதலை பெற வேண்டும்—திராவிட நாடு திராவிடர்க்காக வேண்டும் என்ற திராவிடரின் எழுச்சி, எந்த நியாயமான அடிப்படையின் மீது எழுப்பப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டினார்.

நமது எழுச்சிக்கான நியாயத்தை வலியுறுத்த எண்ணற்ற சான்றுகளை எடுத்து வைத்து, அத்தகு நியாயமான சான்றுகளின் துணையுடன் எதிரொலித்துக் கொண்டிருக்கும் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற உரிமைக் குரலை, எந்த ஒரு எதிர்ப்பும்—எவ்வளவு வலுவுள்ளதாகும் அடக்க முடியாது—நிச்சயம் நமது எழுச்சி வெற்றி பெற்றே தீரும்," என்று குறிப்பிட்டார்.

கழகக் கூட்டங்கள்

★

மீஞ்சூர்

27—6—54 ஞாயிறு மாலை
தலைவர்: கோ. பாலகிருஷ்ணன்
பேசுவோர்:
காஞ்சி கல்யாணசுந்தரம்
சிவப்பிரகாசம், பி. ஏ
எஸ். எஸ். தென்னரசு

★

கோவை

தர்மராஜா கோவில் மைதானம்
(29-வது வார்டு)
27—6—54 ஞாயிறு மாலை
பேசுவோர்:
எஸ். முத்து
எஸ். ஏ. ராஜமாணிக்கம்
ஏ. என். சாமி

★

சங்கரன்குளம்

27—6—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: சித்திரை புத்திரன்
பேசுபவர்:
எம். ஆர். கணேசன்

சென்னை 9-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்கட்கு

27—6—54 காலை 10 மணிக்கு சென்னை, எழும்பூர் 9-வது வட்ட தி. மு. கழக பணிமனையில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

சென்னை 18-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்கட்கு

27—6—54 காலை 9 மணி அளவில் 18-வது வட்ட தி. மு. கழக மனையில் செயற் குழு கூடி நான்காம் ஆண்டு விழா, பொருளாளர் தேர்வு, மற்றும் கழக ஆக்க வேலை குறித்துப் பேசி முடிவு செய்யப்படும்.

சென்னை 26-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்கட்கு

27—6—54 காலை 10 மணிக்கு பெரியமெட் கழகக் கட்டிடத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

நாகையில் பேச்சுப் போட்டி

27—6—54 மாலை 6 மணிக்கு நாகை தி. மு. கழகக் கட்டிடத்தில், அறிஞர் சொற் பயிற்சி மன்றத்தின் சார்பில், 'அரசியல் துறையில் தி. மு. கழகம்' எனும் பொருள் பற்றிய பேச்சுப் போட்டி நடைபெறும்.

சொற் பயிற்சி வகுப்பு

27—6—54 மாலை 2 மணிக்கு சென்னை, திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தில் சொற் பயிற்சி வகுப்பு நடைபெறும். தோழர் இ. மு. நெடுமாறன் தலைமையில் 'நமது கவிஞர்கள்' என்பது பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

தர்மபுரி வட்ட ஆரம்ப ஆசிரியர் மாநாடு

27—6—54 காலை 10 மணிக்கு தர்மபுரி குமாரசாமிப்பேட்டை நாட்டாண்மைக் கழக துவக்கப் பள்ளிக் கட்டிடத்தில், தோழர் எம். கந்தசாமிக் கவுண்டர், எம். எல். ஏ. தலைமையில் மாநாடு நடைபெறும்

செய்திக்கதிர்

தங்கச் சுரங்கம்

பதன் கோட்டை ரயில் நிலையம் அருகே சாக்கடை வெட்டும் போது தங்கம் கலந்த பாறை காணப்பட்டதாம்! கான்பூர் ஆராய்ச்சி நிலையத்திற்கு அந்தப் பாறை பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதாம்!

★

தேர்தல்

ஜலந்தரம் இரட்டை உறுப்பினர் தொகுதிக்கான உப-தேர்தலில் எட்டு பேர் அபேட்சை மனு தாக்கல் செய்துள்ளனர் என்று தெரிகிறது.

★

ஆதரவு

ஐக்கிய மகாராஷ்டிரத்தில் பம்பாய் நகரை இணைக்க பம்பாய் இராஜ்யப் பிரஜா-சோஷலிஸ்டு கட்சியினர் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

★

கைகலப்பு

இந்தியா - பாகிஸ்தான் எல்லையான பார்மன் என்னுமிடத்தில் போலீசாருக்கும் கொள்ளைக் கூட்டத்தினருக்கும் இடையே கைகலப்பு நடைபெற்றதாம். பாகிஸ்தானை நோக்கி இக் கொள்ளைக் கூட்டம் செல்ல முயற்சித்ததாம்.

★

வெள்ளம்

கோசி நதியில் வெள்ளம் ஏற்பட்டிருப்பதால் தர்பங்கா மாவட்டத்தின் சுமார் 100 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

★

கைது

சென்னை முதல் அமைச்சரைக் கொல்ல முயற்சித்ததாக டி. ஜே. வி. நாயுடு என்பவர் கைது செய்யப்பட்டார். பதவி உயர்வு கிடைக்காத காரணத்தால் இவர் இப்படிச் செய்ய முயன்றார் என்று தெரிகிறது

★

உண்ணாவிரதம்

டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜியின் மரணம் பற்றி விசாரணை நடத்தப்படவில்லை என்றால் ஜனசங்கம், பிரஜாபரிஷத் ஆகிய இயக்கங்களின் தொண்டர்கள் உண்ணாவிரதம் இருப்பார்கள் என்று அவ்வியக்கத் தலைவர்கள் பொதுக் கூட்டமொன்றில் தெரிவித்தனர்.

புதுவையில் வெடிமருந்துக் கப்பல்!

இரகசியமாக இறக்கப்பட்டன!

புதுச்சேரி, ஜூன் 24—

செய்கோனில் இருந்து 'செயின்ட் கசயர்' என்ற கப்பலில் புதுச்சேரிக்கு 300 பெட்டிகள் வெடிமருந்து வந்ததாம்

இப்பெட்டிகளை இறக்குமுன்னராக பீச் ரோடில் மக்கள், வண்டிகள், போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்ததாம்.

பெட்டிகளை இறக்க 3-மணி நேரம் ஆயிற்றென்றும், சில நாட்களுக்கு முன்னர் புதுச்சேரிக்கு வந்திறங்கிய பிரெஞ்சுத் துருப்புகளே இந்த வேலையை மேற்பார்வையிட்டனர் என்று தெரிகிறது.

பிரெஞ்சு சர்க்காரின் முக்கிய அதிகாரிகள் கப்பலுக்குச் சென்று பார்வையிட்டனரெனத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, [illegible] நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.